கடனாகத்தான் கொடுக்கமுடியும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். இன்னும் அவர்கள் "டெக்னிகல் கிளியரென்ஸ்" கொடுக்கவில்லை. அதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கடல் அரிப்பு ஜூன், ஜூலை மாதங்களில் வருஷந்தோறும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. மிடாலம் என்ற கிராமத்தில் ரூ. 85,000 செலவழித்து தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. ஆனால் அந்தத் தடுப்புச் சுவர் கட்டிய ஒரு மாதத்திற்குள் அடித்துச் செல்லப்பட்டது. ஆகவே, இம்மாதிரி பணத்தை அரசு செலவு செய்கிறபோது சரியான முறையில் நிரந்தரமாக பரிகாரம் காணும் முறையில் திட்டங்களை வகுப்பார்களா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, அது போன்ற ஒரு திட்டத்தைத்தான் நான் தெரிவித்தேன். ஏறக்குறைய ரூ. 3·51 கோடி அளவில் செலவு செய்து நிரந்தரமான தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்றுதான் திட்டமிட்டு இருக்கிறோம். மத்திய அரசாங்கம் இன்னும் அதற்கு "டெக்னிகல் கிளியரன்ஸ்" தரவில்லை. சில தகவல்கள் கேட்டு இருக்கிறார்கள். அந்தத் தகவல்கள் கொடுத்து, அவர்கள் அனுமதி கிடைத்த பிறகு வேலை தொடங்கப்படலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கடல் அரிப்பு எந்தெந்தப் பகுதிகளில் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கை தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் விரிவாக அளிப்பதாகக் கூறினார்கள். அதைப்பற்றி தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இராமேஸ்வரம், கன்னியாகுமரி பகுதிகளில்தான் கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது.

முற்பகல் [9.30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கடலரிப்பினால் இரண்டு குடிசைகள் நாசமானதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்பட்டதா? தென்னை மரங்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு நஷ்ட ஈடுதரப்பட்டதாக தகவல் இருக்கிறது. எவ்வளவு ரூபாய் என்ற தகவல் இப்பொழுது இல்லை.

காவிரி ஆற்றில் குறுக்கே புதிய பொறிமதகு

*193—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரியில் குறுக்கே புதிய ரெகுலேட்டர் ஒன்று அமைத்து பழங்காவிரி மூலம் அதன் கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதியினை சீராக்கி அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் குறுக்கே பொறிமதகு கட்டும் வேலைக்காக 1973-ம் ஆண்டு ஜுன் மாத இறுதி வரை ரூ. 1,50,770 செலவழிக்கப்பட்டுள்ளது.

கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்துதல்

*194—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் கூற்றம், கள்ளப்பெரம்பூர் ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏரிகளை புதுப்பிப்பதற்கான திட்டத்தின் கீழ்இந்த ஏரியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம்முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: இந்த ஏரியை புதுப்பிப்பதற்கு "டீ ஸில்டிங் கம் ரெக்லேமேஷன் ஸ்கீமின்" கீழ் திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அநேகமாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த ஏரியை ஆழப்படுத்துவதற்குப் பதிலாக அதில் தற்சமயம் நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: ஏரியை விவசாயத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைப் போன்ற திட்டம் கிடையாது.

கோவையில் புறச்சாலை அமைப்பு

*195 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள புறச்சாலைத் திட்ட வேலை எப்போது துவங்கும்?

(இ) மேற்படி வேலை எப்போது முடிவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: (அ) இவ்வேலை இன்னும் துவக்கப்பட வில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.